## முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா உலகம் முழுதும் தமிழர்களால் கொண்டாடப்படுகிறது!

# நகைச்சுவை உணர்வுமிக்க கலைஞர் - ஏழைகளின் வலி தெரிந்த மாபெரும் தலைவர்!

## ‘தமிழ் கேள்வி’ இணைய வலைக் காட்சி’ நேர்காணலில் - மூத்த பத்திரிகையாளர் இரா.குமார் புகழாரம்!

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 100-வது பிறந்தநாளையொட்டி, கலைஞர் என்னென்ன சாதனைகள் செய்திருக்கிறார்; அவருடைய சாதனைகள்; திட்டங்கள் என்னென்ன என்பன பற்றியும்; கலைஞர் அவர்கள் நகைச்சுவைக்குப் பெயர் போனவர்; கலைஞருடைய நகைச்சுவைப் பக்கங்களைப் பற்றியும் விளக்கிடும் வகையில், மூத்த பத்திரிகையாளர் இரா.குமாரிடம், ‘தமிழ் கேள்வி’ இணைய வலைக்காட்சிக்கு அதன் ஆசிரியரும் நிறுவனருமான தி.செந்தில்வேல் சிறப்புப் பேட்டி கண்டார்.**

**அப்பேட்டி வருமாறு:**

**நெறியாளர் தி.செந்தில்வேல் :** *நீண்ட நெடிய அனுபவத்தைக் கொண்டவர் நீங்கள். கலைஞரின் நகைச்சுவைத் திறன்பற்றி சொல்லுங்களேன்?*

**இரா.குமார்:** நாடு முழுவதும் கலைஞர் நூற்றாண்டு பிறந்த நாள் விழா தி.மு.க.வால் கொண்டாடப்படுகிறது என்றீர்கள்; உலகம் முழுவதும் தமிழர்களால் கொண்டாடப்படுகிறது.

கலைஞருடைய நகைச்சுவை என்பது மிகவும் இயல்பாக இருக்கும். எந்தச் சூழ்நிலையிலும் அவருடைய நகைச்சுவை சிறப்பாக இருக்கும்.

உதாரணத்திற்குச் சொல்கிறேன், முதுகில் அறுவை சிகிச்சை செய்வதற்கு முன்பு அமர்ந்திருந்து எழும்போது, வேட்டியை கட்டும்பொழுது, வயது முதிர்வின் காரணமாக பின்னால் தள்ளுகிறது; அப்பொழுது துரைமுருகன் தாங்கிப் பிடித்தார்.

அப்பொழுது கலைஞர் அவர்கள், “என்னய்யா, தள்ளாத வயது என்பார்கள்; இப்படி தள்ளுகிறதே?” என்றார்.

வயது முதுமை காரணத்தைக்கூட அவ்வளவு நகைச்சுவையோடு எடுத்துக்கொண்டார். அந்த நகைச்சுவை உணர்வுதான் அவரை இவ்வளவு காலம் வாழ வைத்தது.

ஒருமுறை 2006 ஆம் ஆண்டு தேர்தலின் போது, கலாநிதி மாறன் சொன்னார். பிளாஸ்டிக் கொடியை தோரணம் போன்று தொங்கவிடுவார்கள்; அதன் மாதிரியை கலைஞரிடம் காண்பித்தார். கருப்பு சிவப்பு கொடி, நடுவில் வட்டமாக கலைஞர் படம்.

“இது பரவாயில்லையா, தாத்தா?” என்று கலாநிதி மாறன் கேட்கிறார்.

கலைஞர் அவர்கள், “டல்லா” இருக்கிறதே?” என்று படம் இருக்கும் இடத்தில் விரலை வைத்துக்கொண்டு சொன்னார்.

“இது பைவ் இயர்ஸ் ஓல்டு” என்று கலாநிதி மாறன் சொன்னார்.

“நோ, நோ இது எய்ட்டி இயர்ஸ் ஓல்டு” என்று கலைஞர் சொன்னார்.

கலைஞர் அவர்கள் எதையும் நகைச்சுவையோடு சொல்லக் கூடியவர்.

1991 ஆம் ஆண்டு மத்தியில் சந்திரசேகர் அவர்கள் பிரதமராக இருந்தார். தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சியைக் கலைப்பதற்காக மத்திய அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றி, குடியரசுத் தலைவராக இருந்த ஆர்.வெங்கட்ராமனுக்கு அனுப்பி வைத்தார்கள்.

அதற்குக் குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளிக்க மாட்டார் என்று மத்தியில் உள்ளவர்களே நினைத்தார்கள்.

அமைச்சரவை தீர்மானம் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது என்ற தகவலும் வெளியில் வந்தது.

அதேபோன்று, அவரும் கையெழுத்துப் போட்டு, ஆட்சியை கலைத்தார்கள்.

நரம்பியல் நிபுணர் ராமமூர்த்தி அவர்கள் கலைஞருக்கு மிகவும் நெருக்கமான நண்பர். இந்தத் தகவல் அறிந்தவுடன் அவர் மிகவும் கோபத்துடன், கோபாலபுரத்திற்குச் சென்று கலைஞரின் அறைக் கதவைத் திறந்து உள்ளே சென்று, “என்னங்க, பிரசிடெண்ட் கடைசியாகக் கையெழுத்துப் போட்டுவிட்டார் போலிருக்கிறதே” என்றார்.

“கடைசியாகக் கையெழுத்துப் போடாமல், ஆரம்பத்திலா கையெழுத்துப் போடுவார்கள்?” என்றார் கலைஞர்.

13 ஆண்டுகாலம் கழித்து, ஆட்சிக்கு வருகிறார்கள்; இரண்டாண்டு காலம்கூட ஆகவில்லை. ஆட்சியைக் கலைத்துவிட்டார்கள். அந்தச் சூழ்நிலையில்கூட அவர் அவ்வளவு நகைச்சுவையோடு பேசினார்.

திருச்செந்தூர் சுப்பிரமணியம் பிள்ளையின் மரணம் குறித்து பால் கமிசனை நியமித்து, அந்த அறிக்கையை வெளியிடாமல் வைத்திருந்தார்கள். அந்த அறிக்கையை முரசொலியில் கலைஞர் அவர்கள் வெளியிட்டார்.

‘நீதி கேட்டு நெடும் பயணம்’ மதுரையிலிருந்து திருச்செந்தூருக்கு நடந்தே போனார்.

அதன் பிறகு, சட்டப்பேரவையில் அ.தி.மு.க.வினர் பேசும்பொழுது. “வேலைக் காணவில்லை என்று திருச்செந்தூர் சென்றார்; இவர் போனவுடன், திருச்செந்தூர் முருகனே இராமாபுரம் வந்துவிட்டார்” என்றனர்.

கலைஞர் அவர்கள், “வேல் மட்டும்தான் காணவில்லை என்று நினைத்தேன்; இப்பொழுது முருகன் சிலையும் காணாமல் போய்விட்டதா?” என்று சொன்னவுடன், சட்டப்பேரவையில் இருந்த அனைவரும் சிரித்துவிட்டனர்.


நெறியாளர் தி.செந்தில்வேல் — மூத்த பத்திரிகையாளர் இரா.குமார்

இதை அவைக் குறிப்பிலிருந்து எடுக்கவேண்டும் என்று முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் கேட்டுக்கொண்டார்.

உமாநாத் அவர்கள், “இதை எடுக்கவேண்டாம்; இருக்கட்டும்” என்று சொல்லிவிட்டார்.

குமரிஅனந்தன் அவர்கள் காங்கிரசிலிருந்து பிரிந்து, தனியாக ஒரு கட்சியைத் தொடங்கினார். அப்பொழுது மணியார்டர் பாரம் ஆங்கிலத்திலும், இந்தியிலும்தான் இருக்கும். அதை தமிழில் கொண்டுவரவேண்டும் என்பதற்காக ஒரு போராட்டம் நடத்தினார். அவருடைய கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக்கொண்டு, தமிழிலும், ஆங்கிலத்திலும் மணியார்டர் பாரத்தை வெளியிட்டார்கள்.

அதன் பிறகு குமரிஅனந்தன் அவர்கள் காங்கிரசில் இணைந்துவிட்டார்.

அவர் சட்டப்பேரவையில் பேசும்பொழுது, “தமிழ் வளர்ச்சிக்குக் காங்கிரஸ் இயக்கம் பாடுபட்டது” என்றார்.

“என்ன பாடுபட்டது?” என்று கேட்டார்கள்.

“நாங்கள்தான் மணியார்டர் பாரத்தை தமிழில் கொண்டு வருவதற்குக் காரணம்” என்றார்.

உடனே சற்குணபாண்டியன் அவர்கள், “அப்பொழுது நீங்கள் தனிக்கட்சியாக இருந்தபொழுது தானே அது நடந்தது? அது எப்படி காங்கிரஸ் பேரியக்கத்தைச் சாரும்?” என்றார்.

“நான் காங்கிரஸ் பேரியக்கத்தில் சேர்ந்துவிட்டதால், நான் செய்த அத்தனை பெருமையும் காங்கிரஸ் பேரியக்கத்தையே சேரும்” என்றார் குமரி அனந்தன்.

முதலமைச்சர் கலைஞர் உடனே எழுந்து, “நீங்கள் தனியாகக் கட்சி தொடங்கியபொழுது, இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக இந்திரா அம்மையாரின் படத்தை எரித்தீர்களே, அந்தப் பெருமையும் காங்கிரஸ் பேரியக்கத்தைச் சாருமா?” என்றார்.

ஒருமுறை டாக்டர் ராமகிருஷ்ணன் என்ற அமைச்சர், மானியக் கோரிக்கையின்பொழுது, முதல் பக்கத்தைப் படித்துவிட்டு, அப்படியே தொடர்ந்து 10 பக்கங்களைப் படித்துவிட்டு, தெரியாமல் மீண்டும் முதல் பக்கத்தைப் படித்தார்.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சொக்கர் என்பவர், சட்டப்பேரவையில் தூங்கிக் கொண்டிருந்ததை முதலமைச்சர் கலைஞர் பார்த்துவிட்டார்.

உடனே சொக்கருக்கு அருகிலிருந்தவர் சொன்னவுடன், அவர் எழுந்து, “படித்ததையே அமைச்சர் மீண்டும் படிக்கிறார்” என்றார்.

“நீங்கள் தூங்கிவிட்டீர்கள்; அதனால்தான், மீண்டும் அவர் படிக்கிறார்; உட்காருங்கள்” என்றார்.

முரசொலியில் மதி என்பவர் பணியாற்றினார். புரூப் பார்ப்பதற்காக கலைஞரிடம் கொண்டு வந்தார். “அதை டீ பாயின் மீது வைத்துவிட்டு, அந்த லைட்டை ஆஃப் செய்” என்று கலைஞர் சொல்லியிருக்கிறார்.

மதி அவர்கள், அங்கிருந்த சுவிட்சை போட, ஃபேன் சுழன்று, அந்தக் காற்றில் பேப்பர் எல்லாம் பறக்க ஆரம்பித்தது.

“லைட்டை ஆஃப் செய்ய சொன்னால், ஃபேனை போடுகிறாய்; உனக்கெல்லாம் யார் மதின்னு பெயர் வைத்தான்?” என்று கலைஞர் கேட்டார்.

“நீங்கள்தானய்யா” என்று மதி சொன்னார்.

ஒருமுறை சட்டப்பேரவையில், “தலைமுடியை வைத்து கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏதாவது தொழிற்சாலையைத் தொடங்க முடியுமா?” என்று ஒருவர் கேள்வி கேட்டார்.

முதலமைச்சர் கலைஞர் எழுந்து “முடி”யும் என்றார்.

கலைஞருடைய பொதுக்கூட்டமானாலும், பத்திரிகையாளர் சந்திப்பு என்றாலும், மன நிறைவோடு திரும்பி வர முடியும்.

ஒருமுறை நாராயணன் ஒரு கேள்வி கேட்டார், “ஒருவருக்கு ஒரு பதவி என்று கொண்டு வருகிறீர்களே, உங்கள் கட்சிக்காரர்களிடம் வரவேற்பு இருக்கிறதா?” என்று.

“பேஷா, ரொம்ப நன்னாருக்கு” என்றார் கலைஞர்.

**நெறியாளர்:** *கலைஞர் அவர்களின் மரணத்திற்கு முன் ஒரு சில நாள்களுக்கு முன்பு அவர் உடல்நலம் பாதிக்கப்பட்டு இருந்த நேரத்தில், அவருடைய குரலை யாரும் கேட்கவில்லை; வீட்டில் இருந்தபொழுதும் தீவிர சிகிச்சையில் இருந்தார் அல்லவா!*

**குமார்:** அவர் குரலைக் கேட்கவில்லை என்று சொல்லும்பொழு,து, நான் முகநூலில் எழுதினேன், “உன்னிடமே தமிழெடுத்து உன்னை நான் வேண்டுகிறேன்; ஒரே ஒருமுறை உடன்பிறப்பே என்று சொல்லிவிட்டுப் போ!” என்று.

**நெறியாளர்:** *கலைஞர் அவர்களின் குரலை ஒன்றரை, இரண்டு ஆண்டுகளாக யாரும் கேட்கவில்லை. என்னுடைய மூத்த மகள், அவருடைய பிறந்த நாளன்று, அவரைப் பார்ப்பதாகத் திட்டம். மருத்துவர் எழிலன், கோபாலபுரம் இல்லத்திற்கு அழைத்துச் சென்றார்.*

*கலைஞர் மட்டும்தான் இருந்தார்; என்னுடைய மகளிடமும், எழிலனின் மகனிடமும் கொஞ்சி விளையாட ஆரம்பித்துவிட்டார். பிள்ளைகளைப் பார்த்ததும் அவருக்கு அவ்வளவு மகிழ்ச்சி.*

*என்னுடைய மகளிடம் அவர் கேட்ட கேள்வி, “நான் யாரு தெரியுமா?” என்று கரகரத்த குரலில் கேட்டார்.*

*என்னுடைய மகள், “கலைஞர் தாத்தா” என்று சொன்னாள்.*

*உடனே கலைஞர் அவர்கள், கையைத் தூக்க முடியாமல் கஷ்டப்பட்டு தூக்கி, கைகொடுத்தார். அந்தச் செய்தி வைரலாகியது.*

**இரா.குமார்:** குழந்தைகளைப் பார்க்கும்பொழுது, அவரும் குழந்தையாகி விடுவார். மோகன் காமேஸ்வரன் அவர்கள் ஒரு புகழஞ்சலி நிகழ்வில் சொன்னார், “பிறவியிலேயே காது கேளாமை இருக்கும் குழந்தைகள்தான் பேசுகின்ற திறமையை இழந்துவிடுவார்களாம். ஒருமுறை கலைஞரிடம் பேசிக்கொண்டிருந்தபொழுது, ‘உனக்கு ஏதாவது கேளேன்; எதுவுமே கேட்கமாட்டேன் என்கிறாயே?’ என்று சொன்னாராம்.

‘இன்பிளான்டென்ஸ் ஆபரேசன் செய்து, கருவி வைத்தால், காது கேட்கத் தொடங்கிவிடும்’ என்று காமேஸ்வரன் சொல்லியிருக்கிறார்.

‘அப்படியே செய்யேன்; கலைஞர் காப்பீடு திட்டத்தில்’ என்றாராம் கலைஞர்.

‘அந்தத் தொகை போதாது’ என்றாராம்.

‘ஏன்?’ என்று கலைஞர் கேட்டாராம்.

‘ஆறு லட்சம் ரூபாய் ஆகும்’ என்று காமேஸ்வரன் அவர்கள் சொன்னாராம்.

அரசு செலவிலேயே அந்த அறுவை சிகிச்சையை செய்யலாம் என்று கலைஞர் சொல்லியிருக்கிறார்.

மூன்று மாதம் கழித்து, ஒரு விழாவில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள், காமேஸ்வரனை அழைத்து, “எத்தனை ஆபரேசன் செய்தாய்?” என்று கேட்டிருக்கிறார்.

காமேஸ்வரன் கொஞ்சம் தயங்கி நின்றிருக்கிறார்.

“என்ன தயக்கம்? வெளிப்படையாகச் சொல்” என்றாராம் கலைஞர்.

“இன்னும் அரசு ஆணை போடவில்லை அய்யா” என்று காமேஸ்வரன் சொன்னாராம்.

‘உடனடியாக நாளைக்குள் ஆணை போடவேண்டும்’ என்று சொல்லி, அந்த ஆணையைப் போட்டார்.

கிட்டத்தட்ட இதுவரை 2 ஆயிரம் குழந்தைகள் அதனால் பயனடைந்திருக்கிறார்கள்.

ஆபரேசன் செய்த 10 குழந்தைகளை, கலைஞரிடம் அழைத்துச் சென்றிருக்கிறார் டாக்டர் காமேஸ்வரன்.

அதில் ஒரு குழந்தை, “இன்றைக்கு நாங்கள் உங்களால்தான் தாத்தா பேசுகிறோம்” என்றவுடன், கலைஞர் அவர்கள் கண்ணீர் விட்டாராம்.

இந்தத் தகவலை புகழஞ்சலி நிகழ்வில் சொல்லி விட்டு, இன்றுவரை 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் பயனடைந்திருக்கிறார்கள்; அதற்குக் காரணம், அங்கே வைக்கப்பட்டு இருந்த கலைஞர் படத்தைக் காட்டிச் சொன்னவுடன், அங்கே இருந்த அத்துணை பேரும் எழுந்து நின்று கைதட்டினார்கள்.

**நெறியாளர்:** *நீயா? நானா? நிகழ்வில்கூட வடமாநிலத்தைச் சேர்ந்த சகோதரர் ஒருவர் சொன்னார், ‘இங்கே நான் ரேசன் கார்டு வாங்கியதால், என்னுடைய குழந்தைக்கு இலவசமாக ஆபரேசன் செய்ய முடிந்தது; வட இந்தியாவில் இதுபோன்று செய்ய முடியாது; மருத்துவ வசதிகள் இங்கே பெரிய அளவில் இருக்கிறது’ என்று சொன்னார்.*

**இரா.குமார்:** திருக்குவளைக்கு கலைஞர் அவர்கள் செல்கிறார், அந்த ஊரில் நேர்மையான தாசில்தாராக இருந்த ஒருவர் இறந்துவிட்டார்; இறுதிச் சடங்கு செய்வதற்குக்கூட பணம் இல்லை.

அந்தத் தகவலை முதலமைச்சர் கலைஞரிடம் சொன்னவுடன், சென்னைக்கு வந்தவுடன் ஒரு உத்தரவு போட்டார்; “அரசு ஊழியர் இறந்தால், உடனடியாக 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கவேண்டும்; அதனை மாதம் ஒரு ரூபாய் அவருடைய சம்பளத்தில் இருந்து பிடித்துக்கொள்ளவேண்டும்” என்று.

இந்த உத்தரவு போட்ட 10 நாளில், வில்லிவாக்கத்தில் ஒரு அரசு ஊழியர் இறந்துவிட்டார். அவருடைய குடும்பம் வறுமையான குடும்பம்.

அந்தத் திட்டத்தை இப்பொழுதுதான் அறிவித்திருக்கிறார்கள்; இன்னும் சம்பளம் பிடிக்கத் தொடங்கவில்லை. ஆகவே, 10 ஆயிரம் ரூபாய் தர முடியாது என்று அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள்.

இறந்தவருடைய துணைவியார், கலைஞரை தலைமைச் செயலகத்தில் சந்தித்து இந்தத் தகவலை சொன்னவுடன், அதிகாரிகளை அழைத்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள், “9 நாள் வேலை பார்த்திருக்கிறார் அல்லவா; அதில் ஒரு ரூபாயை பிடித்துக் கொள்; உடனே 10 ஆயிரம் ரூபாயைக் கொடுக்க ஆவன செய்யுங்கள்” என்று சொன்னார்.

ஏழைகளின் வலி தெரிந்த ஒரு மாபெரும் தலைவர் கலைஞர் அவர்கள்.

எழுத்தாளராக இருந்ததினால், சமூக அவலங்களை பகுத்துப் பார்க்க அவரால் முடிந்தது. அதிகாரம் இருந்ததால், பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடிந்தது அவரால். எழுத்தாளராக மட்டும் இருந்திருந்தால், எழுதிவிட்டுத்தான் போக முடியும்.

பராசக்தி திரைப்படத்தில் சிவாஜிகணேசன் ரங்கூனிலிருந்து சென்னை வந்து இங்கே துறைமுகத்திலிருந்து வெளியே வரும்பொழுது, “அய்யா... தர்மம் பண்ணுங்க அய்யா” என்பார் ஒருவர்.

‘அடடா, தமிழகத்தின் முதல் குரலே மிக நன்றாக இருக்கிறதே’ என்பார் சிவாஜிகணேசன்.

கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்ததும் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லம்; தொழுநோயாளிகளுக்கு மறுவாழ்வு இல்லத்தைக் கொண்டு வந்தார்.

இன்றைக்குப் பிச்சைக்காரர்களையோ, தொழுநோயாளிகளையோ பார்ப்பது அரிதாக இருக்கிறது.

1971 ஆம் ஆண்டே கண்ணொளி திட்டத்தைக் கொண்டு வந்தவர் கலைஞர். கண்ணாடியும் கொடுத்தார்.

அப்பொழுது கலைஞரிடம் ஒரு கேள்வி கேட்டார்கள், “இவ்வளவு செய்கிறீர்களே, மக்கள் நன்றியோடு இருக்கிறார்களா?” என்று.

“பொதுவாழ்க்கைக்கு வந்துவிட்டால், நாம் செய்வதற்கு மக்கள் நன்றியோடு இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாது. நம் வேலையை நாம் செய்துகொண்டே இருக்கவேண்டும்.

கண்ணொளி திட்டம் கொண்டு வந்தேன்; கண்புரை அறுவை சிகிச்சை செய்து, கண்ணாடி கொடுத்தோம்; பார்வை தெரிந்தவுடன், இரட்டை இலைக்கு வாக்களித்துவிட்டார்கள்” என்றார்.

இன்னொரு முக்கியமான விஷயத்தைச் சொல்கிறேன், எனக்குத் தெரிந்து சென்னையில் கைரிக்ஷா இருந்தது. மனிதனே, மனிதனை அமர வைத்து இழுப்பது. இன்னும் சிலர், கைரிக்ஷாவை வைத்திருப்பார்கள்; காருக்கு ஓட்டுநர் வைத்திருப்பதுபோல, கைரிக்ஷாவை இழுத்துக்கொண்டு போவதற்காக ஒரு ஆளை வைத்திருப்பார்கள்.

கைரிக்ஷாவை 1972 ஆம் ஆண்டு ஒழித்தவர் கலைஞர். மனிதனை மனிதன் இழுப்பது பெரிய இழிவு, அவலம் என்று சொல்லி, சைக்கிள் ரிக்ஷாவை இலவசமாகக் கொடுத்தார்.

கம்யூனிஸ்ட் கட்சி 25 ஆண்டுகாலம் ஆட்சி செய்த மேற்கு வங்காளத்தில் இன்னமும் கைரிக்ஷா இருக்கிறது.

விவசாயக் குடும்பத்தில் பிறந்தவன் நான். கரண்ட் பில் 300 ரூபாய் அல்லது 400 ரூபாய் வரும். கார்த்திகை, மார்கழியில் அந்தப் பணத்தைக் கட்ட முடியாது; அப்படி கட்டாவிட்டால், கரண்ட் கட்டையைப் பிடுங்கிக் கொண்டு போய் விடுவார்கள். நெல் பூ பூத்து, பால் பருவமாக இருக்கும்; அந்தப் பருவத்தில் தண்ணீர் பாய்ச்சாவிட்டால், அத்தனையும் பதராகிவிடும்.

அந்தக் காலகட்டத்தில் 300 ரூபாய், 400 ரூபாய் கரண்ட் பில் கட்டுவது மிகவும் சிரமமாக இருக்கும்.

விவசாயத்திற்கு இலவச மின்சாரத்தை அறிவித்து மிகப்பெரிய புரட்சியை செய்தவர் கலைஞர் அவர்கள்.

சென்னை தியாகராயர் நகர் பேருந்து நிலையத்தின் அருகே பெரியார் சிலை இருக்கிறது அல்லவா? பெரியார் அவர்கள் இறப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அங்கே பேசினார்.

அதனால், கலைஞர் அவர்கள் அங்கே பெரியாருக்குச் சிலை வைத்தார்.

அதைக் கண்டித்து இந்து பத்திரிகையில் தலையங்கம் எழுதினார்கள்.

அப்படியா? இந்து பத்திரிகை அலுவலகம் எதிரிலேயே பெரியார் சிலையை வைத்தார் கலைஞர்.

இவ்வாறு மூத்த பத்திரிகையாளர் இரா.குமார் பதிலளித்தார்.